# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2092/67 - 2018 ඔක්තෝබර් මස 12 වැනි සිකුරාදා - 2018.10.12

*2092/67 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**மாகாண சபை அறிவித்தல்கள்**

வட மத்திய மாகாண மாகாண சபை

***2017 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, வடமத்திய மாகாண மாகாண சபையின் பொருட்கள் ஈடுபிடிப்பவர்களின் நியதிச் சட்டம்***

55 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

வடமத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, நகை அடகு எடுப்பவர்களின் நியதிச் சட்டம் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் ஆளுநர் மாரப்புலிகே ஜயசிங்ஹ ஆகிய நான், பொருட்களை அடகு பிடிப்பவர்களின் நியதிச் சட்ட கட்டளையை 2018, தை 01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் விதிக்கிறேன்.

**கட்டளைகள்**

1. பதிவுக்கட்டணம், வருடாந்த அனுமதிக்கட்டணம் மற்றும் பிணைப்பணம்

| | | | |
|---|---|---|---|
| (i) | பொருட்கள் அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொள்வதற்குரிய பதிவுக் கட்டணம் - உப பிரிவு 4(1) | - | ரூபா 25,000.00 |
| (ii) | பொருட்கள் அடகு பிடிக்கும் வியாபாரத்திற்கான வருடாந்த அனுமதிக் கட்டணம் - 9(1) உப பிரிவு | - | ரூபா 5,000.00 |
| (iii) | உரிமையாளர் மூலம் வைப்பிலிட வேண்டிய பிணைக் கட்டணம் - 7(1) உப பிரிவு | - | ரூபா 100,000.00 |

2. வட்டி விகிதம்

வட்டிக்கு வழங்கப்படும் சகல தொகைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் வட்டி விகிதம் சகல மாதங்களுக்கும் அல்லது மாதத்தின் ஒரு பகுதிக்கும் இரண்டு சதம் ஆகும் - அட்டவணை II

3. ஏதாவது ஒரு பொருளை அடகு வைக்கும்போது, அடகு எடுப்பவருக்கு சமர்ப்பிக்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை, செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்படப்பிரதி என்பவற்றை தம்மிடம் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

மாரப்புலிகே ஜயசிங்ஹ,<br>ஆளுநர்,<br>வடமத்திய மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,<br>வடமத்திய மாகாணம்,<br>அநுராதபுரம்.

*10-1466*


1A - PG 4281 - 107 (2018/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*